உதவி அமர்வு நீதிமன்றம், திண்டுக்கல்.
(தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திண்டுக்கல்)
**முன்னிலை: – திருமதி. வா. தீபா, எம்.எல்.,**
உதவி அமர்வு நீதிபதி, திண்டுக்கல்.
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், திண்டுக்கல்.
2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29–ம் நாள் புதன்கிழமை

**அமர்வு வழக்கு எண். 126/2024**
C.N.R. No.TNDG03-073358-2024
(முதல்நிலை விசாரணை வழக்கு எண். 60/2023)

தமிழக அரசுக்காக,
காவல் ஆய்வாளர்,
திண்டுக்கல் தாலுகா காவல் நிலைய
குற்ற எண்.1003/2021 ………… குற்றமுறையிடுபவர்.

/எதிர்/

1) நாய்வெட்டு (எ) மாரிமுத்து, வயது 19/2021
த/பெ.பாண்டியன்,

2) பேடி பெக்கர் (எ) நாக அர்ஜுன், வயது 23/2021
த/பெ. பாலசுப்பிரமணி,

3) அம்மாவாசை (எ) பார்த்திபன், வயது 24/2021
த/பெ. ஜோதிபாசு … எதிரிகள்.

மேற்படி 1 முதல் 3 எதிரிகளின் முகவரி
பெரிய பள்ளப்பட்டி,
திண்டுக்கல்.

எதிரிகள் மீதான குற்றம் : இந்த வழக்கின் பாதிக்கப்பட்ட நபரான சசிக்குமாரின் சகோதரரான நாகராஜ் என்பவரின் மனைவி அமுதா என்பவர் திண்டுக்கல் மேற்கு வட்டம் பெரிய பள்ளப்பட்டி 7வது வார்டு ஊராட்சி மன்ற உறுப்பினராக உள்ளார். அதனால், சகிக்குமார் மேற்படி அமுதாவுக்கு உதவியான ஊரில் நடக்கும் நல்லது கெட்டது நிகழ்ச்சிகளை முன்னின்று செய்து வந்துள்ளார். சசிக்குமாரின் செயல்பாடுகளைப் பிடிக்காத எதிரிகள் மூவரும்

முன் விரோதம் கொண்டு, 18.08.2021–ம் தேதி பெரிய பள்ளப்பட்டி ஊராட்சி தொடக்கப் பள்ளியில் எலும்பு சிகிச்சைக்கான மருத்துவ முகாம் நடந்துள்ளது. அந்த மருத்துவ முகாமிற்கு வந்த சசிக்குமார் மதியம் 12.15 மணியளவில் மருத்துவ முகாமிலிருந்து வெளியே வந்தபோது எதிரிகள் மூவரும் சசிக்குமாரை கொலை செய்யும் உட்கருத்து கொண்டு அவரை வழி மறித்துள்ளார்கள். அப்போது 3வது எதிரி சசிக்குமாரைப் பார்த்து ஏண்டா எங்க அப்பாவை அசிங்கமாக திட்டின தேவிடியா மகன் ஊரில் நடக்கும் எல்லா விசயத்திலும் நமக்கு எதிராவே பேசி வேலை பார்க்கிறான். இவனை வெட்டி கொல்லுங்கடா என்று சொன்ன போது 1வது எதிரி முன்னேற்பாடாக வைத்திருந்த அருவாளால் சசிக்குமாரைப் பார்த்து தேவிடியா மகனே நீயெல்லாம் எங்களை எதிக்குறதுக்கு ஒரு ஆளாடா இத்தோடு செத்து தொலைந்து போடா என்று சொல்லிக் கொண்டே சசிக்குமாரின் தலை, வலது கை ஆகிய இடங்களில் மாறி மாறி வெட்டி சசிக்குமாருக்கு பலத்த இரத்தக் காயத்தை ஏற்படுத்தியுள்ளார். அப்போது 2வது எதிரி சசிக்குமார் தப்பிச் செல்லாதவாறு பார்த்துக் கொண்டு இருந்துள்ளார். மேற்படி சம்பவத்தை சசிக்குமாரின் மனைவியும், வாதியுமான அமுதா மற்றும் சாட்சிகளான மாரிமுத்து மற்றும் சின்னக்காளை ஆகியோர் எதிரிகளை சத்தம் போட்டு விரட்ட முற்பட்ட போது 2வது எதிரி டேய் இந்த தேவிடியா மகன்கள் எல்லாம் சிசிக்குமாருக்கு சப்போட்டா வராங்க இவங்களையும் சேர்த்து வெட்டுங்கடா என்று கத்தியுள்ளார். அப்போது 1 முதல் 3 எதிரிகள் அவர்களது கையில் வைத்திருந்த அருவாளைக் காட்டி எந்த தேவிடியா மகனாவது கிட்ட வந்தால் சசிக்குமாரை வெட்டுனது போல உங்களையும் வெட்டி கொல்லாமல் விடமாட்டோம் என கொலை மிரட்டடல் விடுத்து சாட்சிகளுக்கு உயிர் பயத்தை ஏற்படுத்திவிட்டு சம்பவத்திற்கு

| | |
|---|---|
| | பயன்படுத்திய ஆயுதத்துடன் தப்பிச் சென்றுள்ளார்கள். மேற்படி குற்ற செய்கைக்காக 1 முதல் 3 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 341, 294(பி), 307 உ/இ 34, 506(2)–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளார்கள் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது. |
| 1 முதல் 3 எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் : | எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 341, 294(பி), 307 உ/இ 34, 506(2)–ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளது. |
| எதிரிகளின் வாதுரை : | குற்றவாளிகள் இல்லை |
| நீதிமன்றத்தின் முடிவு : | குற்றவாளிகள் இல்லை. |
| தீர்ப்பு : | அரசு தரப்பில் 1 முதல் 3 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 341, 294(பி), 307 உ/இ 34, 506(2)–ன் கீழான குற்றச்சாட்டுக்கள் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் ஐயத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி, எதிரிகளை மேற்படி பிரிவின் கீழான குற்றச் சாட்டுக்களுக்கு குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து, எதிரிகளை பிரிவு கு.வி.மு.ச பிரிவு 235(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.<br>இந்த வழக்கில், இந்நீதிமன்ற R.P.R. No.50/2024–ல் கைப்பற்றப்பட்ட சா.பொ.1 சுமார் 64.5 செ.மீ நீளமுள்ள ரத்தம் பட்ட அருவாள் ஒன்றை மேல் முறையீட்டு காலத்திற்குப் பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகின்றது. |

இந்த வழக்கு என் முன்பாக 29.04.2026–ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் திரு. M. விஜயேந்திரன், கூடுதல் அரசு வழக்கறிஞர் அவர்களும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. R. அசோகன்

அவர்களும் முன்னிலையாகி வாதிட்டதைக் கேட்ட பின்னர், இந்த வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து, இதுநாள் வரையில் இந்த நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து, இறுதியாக 29.04.2026–ம் தேதி அன்று விசாரணைக்கு வந்து, இருதரப்பு வாதுரைகளை கேட்டறிந்த பின்னர், இன்று இந்த நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கிடும்

## தீர்ப்புரை

1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :–

இந்த வழக்கின் பாதிக்கப்பட்ட நபரான சசிக்குமாரின் சகோதரரான நாகராஜ் என்பவரின் மனைவி அமுதா என்பவர் திண்டுக்கல் மேற்கு வட்டம் பெரிய பள்ளப்பட்டி 7வது வார்டு ஊராட்சி மன்ற உறுப்பினராக உள்ளார். அதனால், சகிக்குமார் மேற்படி அமுதாவுக்கு உதவியான ஊரில் நடக்கும் நல்லது கெட்டது நிகழ்ச்சிகளை முன்னின்று செய்து வந்துள்ளார். சசிக்குமாரின் செயல்பாடுகளைப் பிடிக்காத எதிரிகள் மூவரும் முன் விரோதம் கொண்டு, 18.08.2021–ம் தேதி பெரிய பள்ளப்பட்டி ஊராட்சி தொடக்கப் பள்ளியில் எலும்பு சிகிச்சைக்கான மருத்துவ முகாம் நடந்துள்ளது. அந்த மருத்துவ முகாமிற்கு வந்த சசிக்குமார் மதியம் 12.15 மணியளவில் மருத்துவ முகாமிலிருந்து வெளியே வந்தபோது எதிரிகள் மூவரும் சசிக்குமாரை கொலை செய்யும் உட்கருத்து கொண்டு அவரை வழி மறித்துள்ளார்கள். அப்போது 3வது எதிரி சசிக்குமாரைப் பார்த்து ஏண்டா எங்க அப்பாவை அசிங்கமாக திட்டின தேவிடியா மகன் ஊரில் நடக்கும் எல்லா விசயத்திலும் நமக்கு எதிராவே பேசி வேலை பார்க்கிறான். இவனை வெட்டி கொல்லுங்கடா என்று சொன்ன போது 1வது எதிரி முன்னேற்பாடாக வைத்திருந்த அருவாளால் சசிக்குமாரைப் பார்த்து தேவிடியா மகனே நீயெல்லாம் எங்களை எதிக்குறதுக்கு ஒரு ஆளாடா இத்தோடு செத்து தொலைந்து போடா என்று சொல்லிக் கொண்டே சசிக்குமாரின் தலை, வலது கை ஆகிய இடங்களில் மாறி மாறி வெட்டி சசிக்குமாருக்கு பலத்த இரத்தக்

காயத்தை ஏற்படுத்தியுள்ளார். அப்போது 2வது எதிரி சசிக்குமார் தப்பிச் செல்லாதவாறு பார்த்துக் கொண்டு இருந்துள்ளார். மேற்படி சம்பவத்தை சசிக்குமாரின் மனைவியும், வாதியுமான அமுதா மற்றும் சாட்சிகளான மாரிமுத்து மற்றும் சின்னக்காளை ஆகியோர் எதிரிகளை சத்தம் போட்டு விரட்ட முற்பட்ட போது 2வது எதிரி டேய் இந்த தேவிடியா மகன்கள் எல்லாம் சிசிக்குமாருக்கு சப்போட்டா வராங்க இவங்களையும் சேர்த்து வெட்டுங்கடா என்று கத்தியுள்ளார். அப்போது 1 முதல் 3 எதிரிகள் அவர்களது கையில் வைத்திருந்த அருவாளைக் காட்டி எந்த தேவிடியா மகனாவது கிட்ட வந்தால் சசிக்குமாரை வெட்டுனது போல உங்களையும் வெட்டி கொல்லாமல் விடமாட்டோம் என கொலை மிரட்டல் விடுத்து சாட்சிகளுக்கு உயிர் பயத்தை ஏற்படுத்திவிட்டு சம்பவத்திற்கு பயன்படுத்திய ஆயுதத்துடன் தப்பிச் சென்றுள்ளார்கள். மேற்படி குற்ற செய்கைக்காக 1 முதல் 3 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 341, 294(பி), 307 உ/இ 34, 506(2)-ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளார்கள் என திண்டுக்கல் தாலுகா காவல் நிலைய ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. மேற்படி குற்ற அறிக்கையை பரிசீலனை செய்து, முடிவில் இவ்வழக்கானது குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் PRC 60/2023 ஆக 11.09.2023-ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இவ்வழக்கின் எதிரிகள் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் எதிரிகளுக்கு இவ்வழக்கில் ஆவணங்கள் அனைத்தும் கு.வி.மு.ச. 207 பிரிவின் கீழ் இலவசமாக வழங்கி பின்னர் இவ்வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்து, எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்களானது அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்க குற்றச் சாட்டுக்கள் என்பதால், முதல் நிலை பதிவு வழக்கினை திண்டுக்கல், முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு

நீதிமன்றத்தில் குவிமுச பிரிவு 209(அ)ன் கீழ் விசாரணைக்காக சமர்ப்பித்துள்ளார்.

3. திண்டுக்கல், முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் இவ்வழக்கானது 16.08.2024-ம் தேதியன்று அமர்வு வழக்கு எண்.126/2024 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, மேல் விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்நீதிமன்றத்தில் எதிரிகள் ஆஜரானபோது, இருதரப்பினைக் கேட்டும், அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை பரிசீலனை செய்தும், எதிரிகள் இறுதி அறிக்கையில் கண்டுள்ள குற்றத்தினை புரிந்திருக்கக் கூடும் என்று அனுமானிக்க போதிய ஆதாரங்கள் இருந்ததால், 1 முதல் 3 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 341, 294(பி), 307 உ/இ 34, 506(2)-ன் கீழ் எழுத்து மூலமான குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டு தமிழில் விளக்கி கூறி வினவியபோது, எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்று மறுத்தார்கள். எதிரிகள் குற்றத்தினை மறுத்த காரணத்தினால், இவ்வழக்கு அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டது.

4. அதன் பேரில் அரசுத் தரப்பு வழக்கை நிரூபிக்கும் வகையில், அரசுத் தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.10 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.13 வரையிலான சான்றாவணங்களும் மற்றும் சா.பொ.1 சான்று பொருளும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் இல்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

<u>5. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு :-</u>

I) இந்த வழக்கில் நிகர்நிலை புகார்தாரரான அ.சா.1 அ.சா.1 அமுதா என்பவர் தன்னுடைய சாட்சியத்தில், சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் பகல் 12.30 மணி இருக்கும் என்றும், தனது கணவரின் அண்ணனின் மனைவி பெரிய

பள்ளபட்டியில் 7–வது வார்டு கவுன்சிலராக இருந்ததாகவும், அன்றைய தினம் தண்ணீர் பிரச்சனை சம்மந்தமாக பஞ்சாயத்து நடந்து கொண்டு இருந்தபோது 3–வது எதிரி தனது கணவரை அழைத்து பேசிக் கொண்டு இருந்தபோது அவருக்கு பின்னால் இருந்து 1–வது எதிரி மாரிமுத்து அரிவாளால் பின் தலையில் வெட்டினார் என்றும், அவர் கையால் தடுக்க முற்பட்ட போது வலது கையில் உள்ளங்கையிலும், முன்கையிலும் வெட்டு விழுந்ததாகவும், தானும், சின்னகாளை என்பவரும் அவரை ஆட்டோவில் ஏற்றி திண்டுக்கல் பெரிய ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக கொண்டு சேர்த்தாகவும், அவருக்கு தலையில் மூளையில் பாதிப்பு ஏற்பட்டு இருப்பதால் மதுரைக்கு எடுத்து செல்ல சொன்னார்கள் என்றும், போலீசார் மருத்துவமனையில் தன்னிடம் அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலம் பெற்றார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் என்றும், தன்னுடன் சின்னகாளை என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டு இருக்கிறார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

ii) அ.சா.2 சசிக்குமார் என்பவர் தன்னுடைய சாட்சியத்தில், ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், அசா. 1 தனது மனைவி என்றும், 18–ம் தேதி 2021–ம் வருடம் மாதம் நினைவில் இல்லை, மதியம் சுமார் 01.00 மணிக்கு மேல் தனது அண்ணன் மனைவி பள்ளபட்டி ஊராட்சியில் 7–வது வார்டு உறுப்பினராக இருக்கிறார் என்றும், அன்றைக்கு காலையில் சுமார் 07.00 மணிக்கு தான் அவருக்கு துணையாக வார்டு வேலைகளை பார்த்து கொண்டு இருந்தபோது, ஆத்தூர் குடிநீர் வேண்டி தனது தலைமையில் மக்கள் போராட்டம் நடந்தததாகவும், அது முடிந்த பிறகு பஞ்சாயத்து தலைவர் பரமன் அவர்கள் தண்ணீர் திறப்பதற்காக சாவியை தன்னிடம் கொடுத்தார் என்றும், பின்னர் 2–வது வார்டு உறுப்பினர் சக்திவேல் மூலமாக பள்ளபட்டி, ஊராட்சி மன்ற பள்ளில் நடந்த மருத்துவ முகாமில் கலந்து கொண்டு தான் வெளியில் வரும்போது 3–வது

எதிரி வழி மறித்து, "ஏண்டா என் அப்பனை திட்டினாய் என்று கேட்டதாகவும், அதற்கு தான் எதுக்குடா திட்டப்போறேன் என்று கேட்டபோது 1–வது எதிரி தன்னை பின்புறம் இருந்து பின்னந்தலையில் அரிவாளால் வெட்ட வரும்போது, தான் வலது கையால் தடுக்க முற்பட்ட போது ஆள்காட்டி விரல் மற்றும் உள்ளங்கையின் அருகே காயம் ஏற்பட்டதாகவும், தான் அங்கு இருந்து தப்பித்து தனது வீட்டிற்கு சென்று விட்டதாகவும், அங்கு இருந்து தனது மனைவி மற்றும் அருகில் இருந்தவர்கள் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்றும், அங்கு தான் மயக்கம் அடைந்து விட்டதாகவும், அதன் பிறகு தன்னை மதுரை அரசு மருத்துவமனைக்கு சென்று கிசிக்சை அளித்த விபரத்தை தெரிந்து கொண்டதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

iii) அ.சா.3 சின்னக்காளை என்பவர் தனது சாட்சியத்தில், புகார் மனுவில் சாட்சி கையொப்பம் செய்ததை ஒப்புக் கொண்டும், எதிரிகள் மற்றும் அ.சா.1, அ.சா.2 ஆகியோரைத் தெரியும் என்றும், சண்டை நடந்தது தெரியாது என்றும், மேற்படி இருவருக்கும் சண்டை நடந்ததாக கேள்விப்பட்டு திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தாகவும் சாட்சியமளித்து அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக மாறி இருக்கிறார். அ.சா.4 பார்த்திபன் என்பவர் பார்வை மகஜரிலுள்ள கையெழுத்துக்கள் தன்னுடைய இல்லை என்று சாட்சியமளித்துள்ளார். அ.சா.5 பிரவீன் குமார் என்பவர் பார்வை மகஜரிலுள்ள தன்னுடைய கையொப்பத்தை மட்டும் ஒப்புக் கொண்டு அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதப்பட்டுள்ளார். அ.சா.6 விக்னேஷ் என்பவர் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள தன்னுடைய கையொப்பங்களை மட்டும் ஒப்புக் கொண்டுள்ளார். மேற்படி கையொப்பங்களை திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்தில் வைத்து போட்டதாகவும், தன் முன்னால் பொருள் எதுவும் கைப்பற்றவில்லை என்றும், யாரையும் விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்து அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக மாறி இருக்கிறார்.

iv) அ.சா.7 மருத்துவர் தெய்வா என்பவர் தன்னுடைய சாட்சியத்தில், கடந்த 18.08.2021ம் தேதி மதியம் 01.16 மணியளவில் தான் திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது, திண்டுக்கல், பெரியபள்ளபட்டி, பேகம்பூர் (PO) ல் வசிக்கும் சசிக்குமார் (42 வயது), தகப்பன் பெயர் காளிமுத்து என்பவரை அவரது மனைவி அமுதா அவசர சிகிச்சை பிரிவுக்கு சிகிச்சைக்காக அழைத்து வந்தார் என்றும், அவருக்கு தான் சிகிச்சை அளித்ததாகவும், அவருக்கு 1) இடது பக்க தலையில் (Left Pareital Region) 12x2x2 cm அளவில் ஒரு ஆழமான சிதைந்த காயம் இரத்தம் வழிந்த படியே இருந்ததாகவும், 2) வலது பக்கம் உள்ளங்கையில் ஒரு சிதைந்த காயம் 3x1x1 cm அளவில் இரத்தம் வழிந்தபடியே இருந்ததாகவும், அவரை உள்நோயாளியாக அனுமதித்தும், மேற்படி நபருக்கு காயங்கள் எவ்வாறு ஏற்பட்டது என்று கேட்டதற்கு, அன்று 18.08.2021ம் தேதி மதியம் 12.30 மணியளவில் பள்ளபட்டி பஞ்சாயத்து அலுவலகத்திற்கு முன் ஒரு தெரிந்த நபர் அவரை அருவாள் மற்றும் ராடு வைத்து தாக்கியதாக கூறியதாகவும், தான் மேல் சிகிச்சைக்காக அவரை மதுரை, அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு செல்லுமாறு பரிந்துரை செய்ததாகவும், மதுரை, அரசு இராஜாஜி மருத்துவமனை நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணரின் கூற்றுப்படி மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் என்று அ.சா.ஆ.6 விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று வழங்கியதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

v) அ.சா.9 விஜய், சார்பு ஆய்வாளர் தன்னுடைய சாட்சியத்தில், நான் கடந்த 18.08.2021 ம்தேதி 14.30 மணிக்கு திண்டுக்கல் தாலுகா காவல்நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்தபோது, திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப் பெற்று, அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த சசிக்குமார் என்பவர் மயக்க நிலையில் இருந்ததால்,

அவரது மனைவி அமுதா, தெற்கு தெரு, பெரிய பள்ளபட்டியைச் சேர்ந்தவர் கொடுத்த புகாரினைப் பெற்று, நிலையக்குற்ற எண். 1003/2021, பிரிவுகள் 294(b), 341, 307, 506(ii) இ.த.ச ஆக அ.சா.ஆ.7 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, மேற்படி முதல் தகவல் அறிக்கையும், வாதியின் புகாரையும் நீதிமன்றத்திற்கும், மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை ஆய்வாளர் பார்வைக்கும் வைத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

vi) அ.சா.10 திரு.உலகநாதன், காவல் ஆய்வாளர் தன்னுடைய சாட்சியத்தில், தங்கள் காவல் நிலையத்தில் பணிபுரிந்த உதவி ஆய்வாளர் திரு. விஜய் அவர்களையும், காவல் ஆய்வாளர் திரு. பாஸ்டின் தினகரன் அவர்களையும் தனக்கு நன்கு தெரியும் என்றும், அவர்களுடைய கையெழுத்து மற்றும் கையொப்பங்கள் தனக்கு நன்கு பரிட்சையம் என்றும், அவர்கள் தற்போது வேறு மாவட்டத்தில் பணிபுரிவதால், வழக்கின் காலதாமத்தை தவிற்கும் பொருட்டு தான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதாகவும், கடந்த 18.08.2021ம் தேதி உதவி ஆய்வாளர் திரு. விஜய் அவர்கள் பதிவு செய்த வழக்கு கோப்பை மேல் விசாரணை செய்வதற்காக ஆய்வாளர் திரு. பாஸ்டின் தினகரன் அவர்களின் பார்வைக்கு வழக்கு கோப்பினை ஒப்படைத்துள்ளார் என்றும், ஆய்வாளர் அவர்கள் அன்றைய தினமே 15.45 மணிக்கு வழக்கின் சம்பவ இடமான திண்டுக்கல், பெரிய பள்ளபட்டி ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி அருகே சென்று சாட்சிகள் பிரவீன்குமார் மற்றும் பார்தீபன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு, சம்பவ இடத்தினை விளக்கும் அ.சா.ஆ.9 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.8 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் என்றும், அன்றைய தினமே மாலை 06.00 மணிக்கு இவ்வழக்கு குற்ற சம்பவம் தொடர்பாக எதிரியை தேடி வந்த நிலையில் ஆய்வாளர் அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி திண்டுக்கல் – வத்தலக்குண்டு

பைபாஸ் மேம்பாலம் அருகே நின்று கொண்டிருந்த எதிரி நாய்வெட்டு என்ற மாரிமுத்து என்பவரை சாட்சிகள் சுபாஷ் சந்திரபோஸ் மற்றும் விக்னேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் காரணம் கூறி கைது செய்து, விசாரணை செய்தபோது, அவர் சாட்சிகள் முன்னிலையில் எவ்வித வற்புறுத்தலும், தூண்டுதலுமின்றி தன்னிச்சையாக கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்தின் அடிப்படையில், சம்பவத்தின்போது சாட்சி சசிக்குமார் என்பவரை தாக்குவதற்கு பயன்படுத்திய அருவாளை பெரிய ஆண்டவர் கோவில் பின்புறம் உள்ள முட்புதரில் மறைத்து வைத்திருப்பதாகவும் அவரை அழைத்துச் சென்றால் அதனை எடுத்து ஆஜர் செய்வதாகவும், அன்றைய தினமே 19.05 மணிக்கு எதிரி மற்றும் சாட்சிகளுடன் வத்தலக்குண்டு பைபாஸ், அணுகு சாலை பெரியாண்டவர் கோவில் பின்புறம் சென்றபோது, அங்கு முட்புதரில் இருந்து எதிரி இரத்தம்பட்ட 64.5 செ.மீ. இரும்பு பகுதியும், 50 செ.மீ. சில்வர் மற்றும் 14.5 செ.மீ. மரக்கைப்பிடியுடன் கூடிய சா.பொ.1 அருவாளை எதிரி எடுத்து ஆஜர் செய்ய அ.சா.ஆ.11 கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியதாகவும், இவ்வழக்கின் சாட்சிகளான அமுதா, சசிக்குமார், மாரிமுத்து, சின்னக்காளை, அமுதா, பிரவீன்குமார், பார்தீபன், சுபாஷ் சந்திரபோஸ், விக்னேஷ் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் எதிரி மற்றும் வழக்குச் சொத்துடன் நிலையம் சென்று, எதிரியை தக்க வழிக்காவல் மூலமாக நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார் என்றும், பின்னர் 20.10.2021ம் தேதி 17.30 மணிக்கு ஆய்வாளருக்கு கிடைத்த இரகசிய தகவலின்படி இவ்வழக்கின் 2-ம் எதிரி பேடி பெக்கர் என்ற நாகஅர்ஜூன் என்பவரை திண்டுக்கல் தோமையார்புரம் பேருந்து நிறுத்தம் அருகே காரணம் கூறி கைது செய்து தக்க வழிக்காவல் மூலமாக நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார் என்றும், இவ்வழக்கின் மற்றொரு எதிரியான பார்தீபன் என்ற அம்மாவாசை மாண்புமிகு மாவட்ட நீதிமன்ற முன்பிணையில் சென்றுவிட்டார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

vii) மேலும், சம்பவத்தில் காயம்பட்ட அ.சா.2 சசிக்குமார் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திருமதி. தெய்வா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு காயச்சான்றிதழை பெற்றுள்ளார் என்றும், ஆய்வாளர் அவர்கள் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளான 241, 294(b), 307, 506(ii) இ.த.ச.வினை, சட்டப்பிரிவுகள் 241, 294(b), 307, 506(ii) r/w 34 இ.த.ச.வின் கீழ் அ.சா.ஆ.12 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார் என்றும், வழக்கு சொத்தை அ.சா.ஆ.13 படிவம் – 91ன் மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார் என்றும், பின்னர் வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 241, 294(b), 307, 506(ii) r/w 34 இ.த.ச.வின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசுதரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

6. இந்த வழக்கில் அரசுத் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து இந்த எதிரிகளுக்குப் பாதகமாகத் தோன்றிய சங்கதிகளை குறித்து எதிரிகளிடம் பிரிவு 351 BNSS–ன் கீழ் விசாரணை செய்தபோது, எதிரிகள் அரசுத்தரப்பு சாட்சிகள் கூறுவது பொய் என்றும், பொய் வழக்குப் போடப்பட்டுள்ளதாகவும், தங்களது தரப்பில் சாட்சிகள் இல்லை என்றும் கூறியுள்ளார்கள். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படாததால், விசாரணை முடிக்கப்பட்டுள்ளது.

7. தற்போது இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை என்னவென்றால், இவ்வழக்கில் அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச் சாட்டுக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

8. இந்த வழக்கில் அரசு தரப்பில் முன்னிலையான அரசு தரப்பு கூடுதல் குற்றத்துறை வழக்கறிஞர் முன்வைத்த வாதங்களும், எதிரிகள் தரப்பில்

ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் முன் வைத்த வாதங்களும் இந்நீதிமன்றத்தால் கவனமாக கருத்தில் கொள்ளப்பட்டன.

## தீர்வு:–

9. அரசுதரப்பு வழக்கில், இந்த வழக்கின் பாதிக்கப்பட்ட நபரான சசிக்குமாரின் சகோதரரான நாகராஜ் என்பவரின் மனைவியான அ.சா.1 அமுதா என்பவர் திண்டுக்கல் மேற்கு வட்டம் பெரிய பள்ளப்பட்டி 7வது வார்டு ஊராட்சி மன்ற உறுப்பினராக உள்ளார் என்றும், அதனால், சசிக்குமார் மேற்படி அமுதாவுக்கு உதவியான ஊரில் நடக்கும் நல்லது கெட்டது நிகழ்ச்சிகளை முன்னின்று செய்து வந்துள்ளார் என்றும், சசிக்குமாரின் செயல்பாடுகளைப் பிடிக்காத எதிரிகள் மூவரும் முன் விரோதம் கொண்டு, 18.08.2021–ம் தேதி பெரிய பள்ளப்பட்டி ஊராட்சி தொடக்கப் பள்ளியில் எலும்பு சிகிச்சைக்கான மருத்துவ முகாம் நடந்துள்ளது. அந்த மருத்துவ முகாமிற்கு வந்த சசிக்குமார் மதியம் 12.15 மணியளவில் மருத்துவ முகாமிலிருந்து வெளியே வந்தபோது எதிரிகள் மூவரும் சசிக்குமாரை கொலை செய்யும் உட்கருத்து கொண்டு அவரை வழி மறித்தும், 3வது எதிரி சசிக்குமாரைப் பார்த்து ஏண்டா எங்க அப்பாவை அசிங்கமாக திட்டின தேவிடியா மகன் ஊரில் நடக்கும் எல்லா விசயத்திலும் நமக்கு எதிராவே பேசி வேலை பார்க்கிறான். இவனை வெட்டி கொல்லுங்கடா என்று சொன்ன போது 1வது எதிரி முன்னேற்பாடாக வைத்திருந்த அருவாளால் சசிக்குமாரைப் பார்த்து ஆபாசமான வார்த்தைகளால் பேசியும், நீயெல்லாம் எங்களை எதிக்குறதுக்கு ஒரு ஆளாடா இத்தோடு செத்து தொலைந்து போடா என்று சொல்லிக் கொண்டே சசிக்குமாரின் தலை, வலது கை ஆகிய இடங்களில் மாறி மாறி வெட்டி சசிக்குமாருக்கு பலத்த இரத்தக் காயத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றும், அப்போது 2வது எதிரி சசிக்குமார் தப்பிச் செல்லாதவாறு பார்த்துக் கொண்டு இருந்துள்ளார் என்றும், மேற்படி சம்பவத்தை பார்த்த சசிக்குமாரின் மனைவியும், வாதியுமான அமுதா மற்றும் சாட்சிகளான மாரிமுத்து மற்றும் சின்னக்காளை ஆகியோர் எதிரிகளை சத்தம் போட்டு விரட்ட முற்பட்ட போது 2வது எதிரி ஆபாசமாகப்

பேசியும், இவர்கள் எல்லாம் சிசிக்குமாருக்கு சப்போட்டா வராங்க இவங்களையும் சேர்த்து வெட்டுங்கடா என்று கத்தியுள்ளார் என்றும், அப்போது 1 முதல் 3 எதிரிகள் அவர்களது கையில் வைத்திருந்த அருவாளைக் காட்டி எந்த தேவிடியா மகனாவது கிட்ட வந்தால் சசிக்குமாரை வெட்டுனது போல உங்களையும் வெட்டி கொல்லாமல் விடமாட்டோம் என கொலை மிரட்டல் விடுத்து சாட்சிகளுக்கு உயிர் பயத்தை ஏற்படுத்திவிட்டு சம்பவத்திற்கு பயன்படுத்திய ஆயுதத்துடன் தப்பிச் சென்றதாக நிகர்நிலை புகார்தாரரான அ.சா.1 கொடுத்த புகார் மனுவின் பேரில் திண்டுக்கல் தாலுகா காவல் நிலைய போலீசார் வழக்கு பதிவு செய்து, விசாரணை மேற்கொள்ளப்பட்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் சொல்லப்பட்டுள்ளது.

10. அரசுத் தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.10 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.13 வரையிலான சான்றாவணங்களும் மற்றும் சா.பொ.1 சான்று பொருளும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் இல்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

11. இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் முறையாக நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்று பரிசீலிக்கையில், இந்த வழக்கில் புகார்தாரரான அ.சா.1 எதிரிகளுக்கும் அவரது கணவர் சசிக்குமாருக்கும் இருந்த முன்விரோதம் பற்றியும், சம்பவத்தை நேரில் பார்த்த விபரம் பற்றியும் நடவடிகக்கை எடுக்க புகார் கொடுத்தது பற்றியும் மற்ற விபரங்கள் கூறும் சாட்சியாகவும், அ.சா.2 எதிரிகளுக்கும் தனக்கும் இருந்து வந்த விரோதம் பற்றியும், சம்பவம் பற்றியும், தனக்கு ஏற்பட்ட காயம் பற்றியும் கூறும் சாட்சியாகவும், அ.சா.3 சம்பவத்தை நேரில் பார்த்த விபரம் பற்றியும், வாதி கொடுத்த புகாரில் சாட்சி கையொப்பம் செய்த விபரம் பற்றியும் கூறும் சாட்சியாகவும், அ.சா.4, அ.சா.5 ஆகியோர் பார்வை

மகஜரில் கையொப்பம் செய்த சாட்சிகளாகவும் அ.சா.6 மற்றும் அ.சா.8 ஆகியோர் 1வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் செய்த சாட்சிகளாகவும், அ.சா.7 மருத்துவர் காயம்பட்ட நபருக்கு சிகிக்சை அளித்து அவருக்கு காயச்சான்றிதழ் வழங்கியது குறித்தும், அ.சா.9 வாதியிடம் புகாரைப் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த விபரம் பற்றியும், கூடுதல் சாட்சியாக அ.சா.10 காவல் ஆய்வாளர் இவ்வழக்கின் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளித்து புலன் விசாரணை செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சியம் அளிப்பவராகவும், மேற்படி சங்கதிகள் குறித்து சாட்சியம் அளிப்பவர்களாக மேற்படி சாட்சிகள் சாட்சிப் பட்டியலில் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள்.

12. இந்த வழக்கு சம்பவத்தில் காயம்பட்ட நபரான அ.சா.2 ன் சாட்சியம் மிக முக்கியமான சாட்சியமாகும். அ.சா.2–ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், அவரது முதல் விசாரணையில் 1வது எதிரி அரிவாளால் வெட்டினார் என்றும், தான் வலது கையால் தடுக்க முற்பட்டபோது ஆள்காட்டி விரல் மற்றும் உள்ளங்கையின் அருகே காயம் ஏற்பட்டதாகவும் கூறியுள்ளார். அவரது குறுக்கு விசாரணையை பரிசீலனை செய்கையில், 1வது எதிரி பின்புறம் இருந்து தனது பின் தலையில் வெட்டினார் என்று போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் தனக்கு ஞாபகம் இல்லை என்றும், எதிரிகளுக்கும் தனக்கும் நடந்த தள்ளுமுள்ளுவில் தான் கீழே விழுந்து காயம் ஏற்பட்டது என்றால் சரிதான் என்று சாட்சியமளித்துள்ளார். அ.சா.1ன் சாட்சியத்துடன் அவருக்கு சிகிச்சை அளித்த அ.சா.7 மருத்துவரின் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், அ.சா.2க்கு இடது பக்க தலையில் 12x2x2 செ.மீ அளவில் ஒரு ஆழமான சிதைந்த காயம் இரத்தம் வழிந்த படியே இருந்ததாகவும், வலது பக்கம் உள்ளங்கையில் சிதைந்த காயம் இரத்தம் வழிந்தபடியே இருந்ததாகவும், மேற்படி காயங்கள் எவ்வாறு ஏற்பட்டது என்று கேட்டதற்கு அன்று 18.08.2021ம் தேதி

மதியம் 12.30 மணியளவில் பள்ளப்பட்டி பஞ்சாயத்து அலுவலகத்திற்கு முன் ஒரு தெரிந்த நபர் அவரை அருவாள் மற்றும் ராடு வைத்து தாக்கியதாக கூறினார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

13. அ.சா.7 மருத்துவரின் குறுக்கு விசாரணையை பரிசீலனை செய்கையில், அ.சா.2 தன்னிடம் ஒரு நபர் தாக்கியதாகத் தான் சொல்லியுள்ளார் என்றால் சரிதான் என்றும், தன்னை அடித்த நபரின் அடையாளத்தை அ.சா.2 தன்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான் என்றும், அ.சா.2க்கு ஏற்பட்ட காயங்கள் கூரான ஆயுதத்தால் தாக்கப்படும் போது மட்டுமே மேற்படி காயங்கள் ஏற்படும் என்றும் கூறியுள்ளார். மேற்படி அ.சா.2 மற்றும் அ.சா.7 மருத்துவரின் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், அ.சா.2 தனது முதல் விசாரணையில் 1வது எதிரி தாக்கியதாக கூறியுள்ளார். அவரது குறுக்கு விசாரணையில், எதிரிகளுக்கும், தனக்கும் நடந்த தள்ளு முள்ளுவில் கீழே விழுந்த காயம் ஏற்பட்டதாக கூறியுள்ளார். மருத்துவரிடம் தெரிந்த நபர் அருவாள் மற்றும் ராடால் தாக்கியதாக கூறியுள்ளார். மேற்படி அ.சா.2–ன் சாட்சியத்திலும், மருத்துவரிடமும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு கூறியுள்ளதிலிருந்து எதிரிகள் தான் வழக்கு குற்ற சம்பவத்தில் ஈடுபட்டு அ.சா.2க்கு காயத்தை ஏற்படுத்தினார்களா என்பது குறித்து பெருத்த சந்தேகம் ஏற்படுகிறது. மேலும், அ.சா.7 மருத்துவர், அ.சா.2ஐ கூர்மையான ஆயுதத்தால் தாக்கப்படும்போது அவருக்கு மேற்படி காயம் ஏற்பட்டுள்ளது என்று கருத்து கூறியிருந்தாலும், எதிரிகள் தாக்கி தான் அ.சா.2க்கு காயம் ஏற்பட்டது என்பதற்கு அ.சா.2 மற்றும் அ.சா.7 மருத்துவர் ஆகியோரின் சாட்சியம் அமையாத நிலையில், அவர்களது சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு பலவீனத்தை ஏற்படுத்தி இருக்கிறது. மேலும், மருத்துவரின் சாட்சியத்தில் தெரிந்த ஒரு நபர் தாக்கியதாக கூறியுள்ள நிலையில், இந்த வழக்கில் மூன்று நபர்கள் எதிரிகளாக காட்டப்பட்டு இருக்கிறார்கள். எனவே,

இந்த வழக்கு குற்ற சம்பவத்தில் எத்தனை பேர் ஈடுபட்டார்கள் என்பது சந்தேகத்திற்கு உரியதாகவே உள்ளது.

14. சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியும், புகார்தாரருமான அ.சா.1ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், அவரது முதல் விசாரணையில், அரசு தரப்பு வழக்கினை ஒத்து சாட்சியம் அளித்திருந்தாலும், அவரது குறுக்கு விசாரணையில், இந்த வழக்கு சம்பவத்தை பற்றி தனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான் என்றும், புகாரை போலீசார் எழுதிவிட்டு தன்னிடம் கையொப்பம் மட்டும் பெற்றுக் கொண்டார்கள் என்றால் சரிதான் என்றும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.1னிடம் பெற்ற புகார் மனுவைப் பெற்று வழக்கு பதிவு செய்த அ.சா.9 சார்பு ஆய்வாளரின் குறுக்கு விசாரணையை பரிசீலனை செய்கையில், அ.சா.1 புகார் கொடுக்கும்போது தண்ணீர் பிரச்சனை சம்பந்தமாக பஞ்சாயத்து நடந்து கொண்டு இருந்தபோது, தன்னுடைய கணவரை எதிரிகள் பின் தலையில் வெட்டியதாக சொல்லவில்லை என்றால் சரிதான் என்றும், தலையில் வெட்டினார்கள் என்று கூறியுள்ளார். மேற்படி அ.சா.ஆ.1 புகாரிலுள்ள சங்கதிகளுக்கு முரண்பட்டு அ.சா.1 கூறியுள்ளதிலிருந்து புகாரின் உண்மைத் தன்மை குறித்து பெருத்த சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

15. போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து அதில் கையொப்பமிட்ட சாட்சிகளான அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகியோரின் சாட்சியங்களை பரிசீலனை செய்கையில், அ.சா.4 பார்வை மகஜரில் தன்னுடைய கையெழுத்து எதுவும் இல்லை என்று கூறியுள்ளார். அ.சா.5ன் சாட்சியத்தில் பார்வை மகஜரிலுள்ள தன்னுடைய கையொப்பத்தை ஒப்புக் கொண்டுள்ளார். மேற்படி கையெழுத்தை சுமார் 2 வருடங்களுக்கு முன்பு பெரிய பள்ளப்பட்டி மாரியம்மன் கோவில் திருவிழாவிற்காக காவல் நிலையத்திற்கு சென்றிருந்தபோது போலீசார் கையொப்பம் வாங்கினார்கள்

என்று கூறியுள்ள நிலையில், போலீசார் முறைப்படி சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார்கள் என்பதற்கு அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகியோரின் சாட்சியங்கள் அமையாத நிலையில், அவர்களது சாட்சியம் அரசு தரப்பு வழக்கினை பாதிக்கும் வகையிலேயே அமைந்துள்ளது.

16. இந்த வழக்கில் மிக முக்கிய சாட்சியான 1வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்தில் கையொப்பமிட்ட சாட்சிகளான அ.சா.6 மற்றும் அ.சா.8 ஆகியோரின் சாட்சியங்களும் இந்த வழக்கிற்கு மிக முக்கியமானதாகும். அ.சா.6ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், ஒப்புதல் வாக்கு மூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள தனது கையொப்பத்தை ஒப்புக் கொண்டுள்ளார். 2011ம் வருடம் ஒரு நாள் மதியம் சுமார் 1.30 மணியளவில் போலீசார் அழைத்ததன் பேரில் தான் திண்டுக்கல் தாலுகா காவல் நிலையம் சென்றபோது, இந்த மாதிரி வெட்டி விடடார் என்று சொன்னார்கள் என்றும், அதற்காக கையெழுத்து போட்டதாகவும், தனது முன்னால் பொருள் எதுவும் எடுக்கவில்லை என்றும், தன் முன்னால் யாரையும் விசாரிக்கவில்லை என்றும் கூறியுள்ளார். அ.சா.8ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், மேறபடி ஆவணங்களில் உள்ள கையெழுத்துக்கள் தன்னுடையது அல்ல என்றும், வழக்கை பற்றி எதுவும் தெரியாது என்றும் கூறியுள்ளார். மேற்படி அ.சா.6, அ.சா.8 ஆகியோர் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதப்பட்டுள்ளார்கள். எனவே, அவர்களது சாட்சியங்களும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அ.சா.10 இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியாவார்.

17. மேலே விவாதிக்கப்பட்டபடி, அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை

செய்கையில், இந்த வழக்கு சம்பவத்தில் காயம்பட்ட நபரான அ.சா.2, புகார்தாரரான அ.சா.1, பார்வை மகஜர் சாட்சிகள், ஒப்புதல் வாக்கு மூல சாட்சிகள் மற்றும் அ.சா.7 மருத்துவர் ஆகியோரின் சாட்சியங்களிலிருந்து எதிரிகள் தான் வழக்கு குற்ற சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்று மேற்படி சாட்சிகளின் சாட்சியங்கள் அமையவில்லை. மேற்படி சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்த வகையில், எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்களைப் பொறுத்து, அதை அவர்கள் தான் செய்தார்களா என்பதை புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்து முடிவு செய்துவிடலாகாது. அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்கள் தகுந்த மற்றும் நீதிமன்றம் ஏற்கும் படியான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை முன்னிலைப்படுத்தி, நியாயமான சந்தேகங்களுங்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. அ.சா.10 புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியமானது அவர் தனது அரசு பணியைச் செய்யும் போது, சொல்லப்பட்ட ஒன்றாகவே கருத இயலும். எனவே, எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுக்கள் குறித்து அரசு தரப்பில் போதிய சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்படாததால், சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு சாதகமாக்கி தீர்ப்பு அளிப்பது தான் நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

18. இறுதியாக மேலே விவரிக்கப்பட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் வழக்கை பரிசீலிக்கின்றபோது, அரசு தரப்பில் 1 முதல் 3 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 341, 294(பி), 307 உ/இ 34, 506(2)-ன் கீழான குற்றச்சாட்டுக்கள் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் ஐயத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி, எதிரிகளை மேற்படி பிரிவின் கீழான குற்றச் சாட்டுக்களுக்கு

குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து, எதிரிகளை பிரிவு கு.வி.மு.ச பிரிவு 235(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

19. இந்த வழக்கில், இந்நீதிமன்ற R.P.R. No.50/2024–ல் கைப்பற்றப்பட்ட சா.பொ.1 சுமார் 64.5 செ.மீ நீளமுள்ள ரத்தம் பட்ட அருவாள் ஒன்றை மேல் முறையீட்டு காலத்திற்குப் பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகின்றது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழைகள் நீக்கப்பட்டு, இன்று 2026–ம் வருடம் ஏப்ரல் மாதம் 29–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

V DEEPA Digitally signed by V DEEPA Date: 2026.04.30 15:07:16 +0530

உதவி அமர்வு நீதிபதி,
(தலைமை நீதித்துறை நடுவர்)
திண்டுக்கல்.

**<u>அரசுத் தரப்புச் சாட்சிகள்:–</u>**

| | |
|---|---|
| அ.சா.1 | திருமதி. அமுதா |
| அ.சா.2 | திரு. சசிக்குமார் |
| அ.சா.3 | திரு. சின்னக்காளை |
| அ.சா.4 | திரு. பார்த்திபன் |
| அ.சா.5 | திரு. பிரவீன்குமார் |
| அ.சா.6 | திரு. விக்னேஷ் |
| அ.சா.7 | மருத்துவர் தெய்வா |
| அ.சா.8 | திரு. சுபாஷ் சந்திரபோஸ் |
| அ.சா.9 | திரு. விஜய், சார்பு ஆய்வாளர் |
| அ.சா.10 | திரு. உலகநாதன், காவல் ஆய்வாளர். |

**<u>அரசுத் தரப்புச் சான்றாவணங்கள்:–</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 18.08.2021 | தேதியிட்ட புகார் மனு |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.2 | 18.08.2021 | தேதியிட்ட புகார் மனுவிலுள்ள அ.சா.3ன் சாட்சி கையொப்பம். |
| அ.சா.ஆ.3 | 18.08.2021 | தேதியிட்ட பார்வை மகஜரிலுள்ள அ.சா.5ன் முதல் கையொப்பம் மட்டும். |
| அ.சா.ஆ.4 | 18.08.2021 | தேதியிட்ட 1வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்திலுள்ள அ.சா.6ன் கையொப்பம் மட்டும். |
| அ.சா.ஆ.5 | 18.08.2021 | தேதியிட்ட கைப்பற்றுதல் மகஜரிலுள்ள அ.சா.6ன் கையொப்பம் மட்டும். |
| அ.சா.ஆ.6 | 18.08.2021 | தேதியிட்ட விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.7 | 18.08.2021 | தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.8 | 18.08.2021 | தேதியிட்ட பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.9 | 18.08.2021 | தேதியிட்ட மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.10 | 18.08.2021 | தேதியிட்ட 1வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்திலுள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும் |
| அ.சா.ஆ.11 | 18.08.2021 | தேதியிட்ட கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ.12 | 25.10.2021 | தேதியிட்ட சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |
| அ.சா.ஆ.13 | 18.087.2021 | தேதியிட்ட படிவம் 21 |

<u>அரசுதரப்பு சான்று பொருள் :</u>

| | |
|---|---|
| சா.பொ.1 | சுமார் 64.5 செ.மீ நீளமுள்ள ரத்தம் பட்ட அருவாள் ஒன்று. |

<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும், சான்றாவணம் :</u> இல்லை

<u>எதிரிகள் தரப்பு சான்று பொருள் :</u> இல்லை

<u>குறிப்பு:–</u>

1. இந்த வழக்கில் எந்த சாட்சியும் மூன்று முறைக்கு மேல் விசாரணைக்கு அழைக்கப்படவில்லை.
2. இவ்வழக்கின் முடிவு குறித்து இரு தரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டது.
3. சொத்து பற்றிய உத்தரவு உரிய பதிவேட்டில் பதிய உத்தரவிடப்பட்டது.

V DEEPA Digitally signed by V DEEPA Date: 2026.04.30 15:07:06 +0530

உதவி அமர்வு நீதிபதி,
(தலைமை நீதித்துறை நடுவர்)
திண்டுக்கல்.